# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1503/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | லாசர் | த–பெ | மைக்கேல் |
| ஊர்: | : | கல்லுப்பட்டி | | |
| வயது: | : | 73/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | TNSTC ஓட்டுநர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

---

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் கல்லுப்பட்டியில் வசித்து TNSTC ல் ஓட்டுநராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். எதிரியை தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 1**. அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 19.02.2022 அன்று சோமநாதபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 19.02.2022 அன்று மாலை 5.30 மணிக்கு கல்லுப்பட்டி பாலன் ஓர்க் ஷாப்பில் அமர்ந்திருந்தபோது எதிரி அசிங்கமாக பேசி கீழே கிடந்த பிராந்தி பாட்டிலை எடுத்து தலையில் ஓங்கி அடித்தார் என்றும் பிறகு கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் புகார் கொடுத்துவிட்டு பின்னிட்டு விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரியிடம் சமாதானம் ஆகி சமாதான மனு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அசாஆ** 2.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.27 16:15:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.